# திருக்களர்
# ஸ்தல புராணம்

உ

O23:38.21193.T
N45
114661



15 MAY 1945

உ

சிவமயம்.

பாரிஜாதவனேஸ்வரர் துணை.

# திருக்களர்
# ஸ்தல புராணம்.

---

இஃது

சென்னை

இந்துமத பரிபாலன சபையாரின் சுற்றறிக்கைப்படி

ஷை தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பட்டது.

---

தொகுத்தெழுதியவர்

ப. இராமநாத பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்,
மன்னார்குடி.

மன்னார்குடி
கூடத்தில் பதிக்கப்பெற்றது.

1945

Q23:.38.21193.T
N45
114001

Q23:38.21193.T
N45

114001

114001

உ
சிவமயம்

# முன்னுரை.

சிவதலம் நிறைந்த சோழநாட்டில், சைவசமயாசாரியர்களால் தேவாரம் பெற்ற தலங்களுள் திருக்களர் ஒன்றாகும். இதைச் சீரும் சிறப்புடையதாய் விளங்கும்படி செய்த மஹானுபாவரைப்பற்றிக் கூறவேண்டியதும் அன்பர்கள் அறியவேண்டியதும் அவசியமாம். இத்தலம் சுமார் நாற்பதாண்டுகட்கு முன்னர் உருத்தெரியாமல் வனமாயிருந்ததுகண்டு வருந்தி திருப்பணி செய்து விளக்கிக் காணப் பேரவாக்கொண்டிருந்த சிவபுண்யசீலர் பூவனூர் ராசு முதலியாராவார். இவர் ஸ்ரீ கோயிலூர் முத்துராமலிங்க ஞானதேசிகர் அவர்களின் திருமடாலயத்தில் ஐந்தாம் பட்டத்தில் குருமூர்த்தமாய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளை சுவாமிமலையில் முன்னால் தெரிசித்துக் கோயிலூரில் மீண்டும் தரிசித்து வணங்கி இத்தலப் பெருமையையும் அதனிலைமையையும் எடுத்துரைத்துத் திருப்பணி செய்தருள விண்ணப்பித்தார். சுவாமிகளும் இணங்கி, தனதன்பிற்குரிய தனவைசிய சிவபுண்ய சீலர்களுடன் இத்தலத்திற்கு எழுந்தருளி (லட்சக் கணக்கில்) நாலு லட்சத்திற்குமேல் பொருட்செலவு செய்து திருப்பணி முதலியதுகள் செய்தும் கலியப்தம் 5012, விரோதிகிருது ௵ சித்திரை ௴ 21உ குருவாரம் புனர்பூச நட்சத்திரத்தில் சுமார் 40000 ஆயிரம் ரூபாய் செலவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும் செய்து மகிழ்ந்தார்கள்.

திருக்கோயில் முன்பாக வேத பாடசாலைகளும், திருக்குளத்தின் நான்கு பக்கங்களிலும், வேதாந்தமடம்,

சரசுவதிமால், குருபூசை மடம், அக்கிரகாரங்களும், நகர விடுதியும், நந்தனவனம் முதலியனவும் தருமசீலர்களைக்கொண்டு சுமார் 4 லெட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்து கட்டிடங்கள் ஏற்படுத்தியும் ௸ தருமங்கள் சிறப்பாக நடந்துவர அவைகளுக்கு தகுந்த மூலதனமும் வைத்து நடத்த ஏற்பாடும் செய்தார்கள். மேலும், திருவிழாவிற்கு ஐந்து தேர்களும், வெள்ளி ரிஷப முதலிய வாகனாதிகளும், வெள்ளி கவசங்களும் மேற்கொண்டு அநேக கல் இழைத்த அலங்கார நகை, வெள்ளி சரவிளக்கு திருவாசி, சோடசோபசாரம் முதலியனவுமாம். இத்திருப்பணியில் ஞானதேசிக சுவாமிகட்குத் துணையாய் முழுதும் ஈடுபட்ட, ௸ பூவனூர் இராசு முதலியாரவர்களையும், களப்பாள் திரு. இரங்கசாமி முதலியாரவர்களையும் போற்றாதிருக்கமுடியாது.

மகா கும்பாபிஷேகத்திற்குப் பிறகு மண்டலாபிஷேகத்தைக் கால் மண்டலத்திலேயே செய்வித்து ௸ வைகாசி மாதத்தில் பிரமோற்சவத்தை ஆரம்பித்து நடத்தித் தேர்த் திருவிழாவும் நடந்தபோது தெற்கு வீதியில் நடராஜா சந்நிதிக்கெதிரில், தேர் தடைபட்டு இழுபடாமல் நின்றது. அப்போது ஞானதேசிக சுவாமிகள் "மகாதேவா மகாதேவா" என்று உச்சரித்து இரதத்தைத்தொட்டு இழுத்தவண்ணம் ஆனந்தக்கண்ணீர்சோர, ஆனந்த நடராஜாவின் அற்புதத் திருவடியில் அயிக்கியமானார்கள். இவ்வற்புதம் நடந்த புண்ய தினம் விரோதி ௵ வைகாசி மீ 27உ சுக்ரவாரம், விசாக நட்சத்ரம் கூடிய பௌர்ணமி திதியாகும். க. முத்துப்பட்டணம் திருவாளர் ராம. கு. இராமநாதன் செட்டியார் இவ்வற்புதக்காட்சி நடந்த இடத்தில் இதன் ஞாபகார்த்த



மாக முத்தி மண்டபம் ஒன்று கட்டியுள்ளனர். திருத்தேர் இங்கு வரும்போது இந்த ஐதீகமும் இப்போதும் நடைபெற்று வருகிறது. சுவாமிகளின் திருமேனியை வடக்குவீதியில் சமாதிவைத்துப் பாணலிங்கம் நிறுவிக் கோயில் கட்டிப் பூசையும் செவ்வனே நடைபெற்று வருவது போற்றத்தக்கதாம். இக்கோயில் திருக்களர் ஆண்டவர் கோயில் என வழங்கிவருகிறது.

தருமபுர ஆதீனத்தில் வித்வானாயிருந்த, களந்தை (களப்பாள் என வழங்கும்) ஆதியப்பனார் இத்தலபுராணத்தைத் தமிழில் பாடியுள்ளார். அதை யாதாரமாகக் கொண்டு சிற்றறிவுடையேனெழுதத் துணிந்தது பெரியோர் குற்றம் நீக்கிக் குணமே கொள்வர் எனும் துணிபு பற்றியேயாகும்.

இத்தகைய புராண வரலாறுகளை வெளியிட ஏற்பாடு செய்யும் H. R. E. போர்டார் அவர்கள் எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தமைக்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

"அரனுமமே சூழ்க"

திருவடிக்கன்பன்,
ப. இராமநாதன்.

மன்னார்குடி
12—6—45

உ

சிவமயம்

# பாரிசாதவனத்தல புராணம்.

வலம்புரி விநாயகர் துதி:

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவுளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரையுஞ் செம்பொற்றாளிணை வணங்கல் செய்வாம்.

——:(o):——

**திருக்களர்**த்தலம் சோழநாட்டிலே தஞ்சாவூர் ஜில்லாவிலே மன்னார்குடி தாலூகாவிலமைந்துள்ளது. மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் கப்பிச்சாலையில் 10½ மைலிலுள்ள திருப்பத்தூர் பாலத்திலிருந்து தெற்கே செல்லும் கப்பிச் சாலையில் 2½ மைலிலுள்ளது. திருத்துறைப்பூண்டியிலிருந்து 7¼ மைலிலுள்ள ஷை திருப்பத்தூர் பாலத்திலிருந்தும் வரலாம். மேலும் திருத்துறைப்பூண்டியிலிருந்து மட்சாலையில் 5½ மைலிலுள்ள மீனம்பநல்லூரிலிருந்து வடக்கே மன்னார்குடிக்குச் செல்லும் கப்பிச் சாலையில் 1¾ மைலிலுள்ளது.

இது ஒரு அழகிய சிறிய கிராமம். **ஆறுகள் இரண்டு.** கோயிலுக்கு வடக்கே இரண்டு பர்லாங் தூரத்தில் பொன்னுக்குண்டான் ஆறும், கோயிலுக்குத் தெற்கில் நான்கு பர்லாங் தூரத்தில் சாளுவனாறும் ஓடும். பொன்னுக்குண்டான் நதியில் சுவாமி தீர்த்தம் கொடுப்பதுண்டு.

**திருக்கோயில்:** அழகிய நான்கு வீதிகளையுடையதாய் கம்பீரமான ராஜகோபுரத்துடனும் முன்னாலமைந்துள்ள துருவாச தீர்த்தக் கீழ்கரையில் ஐந்து தேர் நிலையங்களுடனும் காட்சியளிக்கும். கோயிலின் வட பாகத்தில் பல்லாயிரம் பெறுமான ருக்வேத பாடசாலையும். பசுமடமும் தென்பாகத்தில் யஜுர்வேத பாடசாலை சாமவேத பாடசாலைகளுமிருக்கின்றன. துருவாச தீர்த்தத் தென்கரையில் கோயிலுக்குச் சொந்தமான குருக்கள். பரிசாரகர்கள், ஜப பிராமணாள், இவர்களுக்கு வீடுகளும் தேவஸ்தான காரியாலயமுமுள்ளது. இன்னும் வடகரையில் பல்லாயிரம் ரூபாய்களைச் செலவழித்துக்கட்டிய சிவனடியார்கள் வசிக்கும் வேதாந்த மடமும் குருபூஜை மடமும் இருக்கின்றன.

**தீர்த்தங்கள் நான்கு:**—1. துருவாச தீர்த்தம்: இது சந்நிதிக்கு முன்னுள்ளது. இது லோகாலோக்ய தீர்த்தம் உலோக்கிய தீர்த்தம், முனி தீர்த்தம் எனவும் பெயர் பெறும். இது மிகவும் சிறப்புடையது இதில் சுவாமி எல்லா விசேஷங்களிலும் தீர்த்தம் கொடுக்கும் போதும் இதர புண்ணிய காலங்களிலும் மூழ்குபவர்களுக்கும், மூழ்கி ஏதேனும் தானம் செய்பவர்களுக்கும், இகபர இஷ்ட சித்திகளை கொடுக்கக்கூடிய சிறப்புடையது.

2. பிரம தீர்த்தம்: கோயிலின் தென்மதிலை யடுத்து, தெற்கு வீதிக்கு வடக்கில் உள்ளது. இது சிந்தாமணி தீர்த்தம் எனவும் பெயர் பெறும். பிரமதேவர் உண்டு பண்ணியதால் பிரம தீர்த்தம் எனவும் மூழ்குபவர்களுக்கு சிந்தாமணியைப்போல் இஷ்டசித்திகளைக் கொடுப்பதால் சிந்தாமணி தீர்த்தம் எனவும் பெயர் பெறும்.



3. உருத்திர தீர்த்தம்: கோயிலின் மேல மதிலையடுத்து மேலவீதிக்குக் கிழக்கில் உள்ளது. இது பதினொரு ருத்திரர்களுண்டுபண்ணியது. இதில் கர்ப்பாந்தத்தில் அநேக ருத்ரர்கள் மூழ்கி ருத்ரபதவி யடைந்ததால் ருத்ர தீர்த்தமென்றும் கமலவாவி யென்றும் பெயர் பெறும்.

4. திருஞான தீர்த்தம்: கோயிலின் வடக்கு மதிலையடுத்து வடக்கு வீதிக்குத் தெற்கிலுள்ளது சிவஞானத்தை யளிப்பது.

**தல விருட்சம்:** பாரிஜாதம் (தமிழில் பவளமல்லிகை) இத்தலம் பாரிஜாதவனம் என்று பெயர்பெற்றது. சிவபெருமானும் பாரிஜாதவனேசுரர் என்று பெயர் பெற்றார். ஆதித்தல விருட்சம் நடராஜா சபைக்குக் கிழ்புறத்தில் உள்ளது.

**திருக்கோயில்:** கர்ப்பக்கிருகம்-அர்த்தமண்டபம். மூலஸ்தான மூர்த்திக்கு பாரிஜாதவனேசுரர் —களர்முளையீசர் என்ற திருநாமமுண்டு. (1)

கிழக்கில், திருமாலைப்பத்தி மண்டபத்தில் சந்திரனும் விசேஷ லிங்கங்கள் நான்கு.

**விசேஷலிங்கம்:** விசுவகர்மா, பிர்மா, மாலதாரகன், இந்திரன் இவர்களால் பூஜிக்கப்பட்ட விசேஷ லிங்கங்கள்.

உட்பிரகாரம் தென்புறம்—தத்தாத்ரேயர், அர்த்தநாரீசர், மாணிக்கவாசகர். (3)

தென்பக்கத்தில்—வரிசையாய் அறுபத்துமூவர்(63)

துருவாசர் (தமக்கு முன்னே ஆனந்தத் தாண்டவம் செய்துகொண்டிருக்கும் நடராஜபெருமானைத் தெரிசித்துக்கொண்டிருக்கும் கோலம்) அகத்தியர் (2)

மாணிக்கவாசகர் நீங்கலாக மூவர் மோக்ஷ துவாரேசுவரர் எனவும் நாமமுடைய லிங்கம்.

தென்மேற்கில், கணபதி, விசுவேசலிங்கம். (2)

மேற்கில், சோமாஸ்கந்தர்— (ஸ்தலவிநாயகராகிய) வலம்புரி விநாயகர். அறுபதினாயிரம் ரிஷிகளுக்கு பஞ்சாக்ஷரத்தை 21 விதமாக உபதேசம் செய்த குருமூர்த்த கோலத்துடன் சண்முகக்கடவுள் வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர், கஜலட்சுமி துர்க்கை, சரசுவதி. (7)

மேற்கே கருவூலம் (பொக்கிஷம்).

வடக்கில், ஸ்ரீ நடராஜா பெருமான் பிரமதாண்டவ மூர்த்தியாய் திருவாசருக்கு, சதாகாட்சி யளிக்கும் திருக்கோலம் சிவகாமியும், கங்காதேவியும், தாண்டவ தெரிசனம் செய்யும் நிலைவிடங்கர் (இச்சந்நிதியில் பேழையிலுள்ளது) நித்தியப்படி அபிஷேகமும் உண்டு. விடங்கர் தனியாயிருக்கிறது.

**உற்சவமூர்த்திகள்**—நடராஜா, திருவாசர், சந்திரசேகரர், நால்வர், சுக்ரவாராம்பிகை, பிரதோஷநாயகர், ஆடிப்பூர அம்மன், அஸ்திரதேவர், சண்டேசர், கிராமதேவதை முதலியன.

சண்டேசுரர் சந்நிதி (மூலவர்).

கீழ்புறம்—துவாரபாலகர் கணேசர் (தாம்பரத்தினால் வார்க்கப்பட்ட நந்தியும் பலிபீடமும் பித்தளையால் வார்க்கப்பட்ட கண்ணாடியும் உள்ளது). சிவ சூரியன்.

அணியொட்டிக்கால் மண்டபத்தில்—பைரவர் நவகிரகங்கள்.



**அம்பிகை சந்நிதி**—அமுதவல்லியம்பாள் கிழக்கு முகமாக கர்ப்பக்ருக அர்த்தமண்டப சந்நிதி. இதற்கு முதல் பிரகாரமுண்டு. கன்னியில் கணபதியும், வடமேற்கு மூலையில் சுப்ரமண்யர் வள்ளிதெய்வானையுடனும், வடக்கில் சண்டேசுவரியும், அம்பாள் சந்நிதியில் மகாமண்டபமும், துவாரசக்தி சந்நிதியில் நந்திகேஸ்வரர் பலிபீடமும் ஈசான்யத்தில் பள்ளியறையுமுண்டு.

இரண்டாம் பிரகாரத்தில் அம்பிகைமுன் சோபன மண்டபத்தில் கீழவாசலில் வடக்கு முகமாய் அட்டபுய கிரி துர்க்கை

சுவாமியம்மன் சந்நிதிகட்கு இரு சிறு கோபுரங்களும் சிவ சந்நிதிக்குமுன், பதினாறுகால் மண்டபத்தில் தூலநந்தி பலிபீடமும், தாமிர துவஜஸ்தம்பமும், ஈசான்யத்தில் வசந்த மண்டபமும் யாகசாலையுமுண்டு.

பெரிய பிரகாரத்தில் கன்னி மூலையில் கணபதி.

அக்னி மூலையில் கருங்கல்லால் செய்யப்பட்ட மூன்று அறைகளும் மடப்பள்ளியும் அமைந்துள்ளன. ஓர் அறையில் ஆராதன அனுஷ்டானமில்லாத உத்ஸவ விக்ரகங்களும், ஓர் அறையில் எண்ணெய் வகையறாக்களும், ஓர் அறையில் நித்தியப்படி படித்தர சாமான்களும் இருக்கின்றன.

ராஜகோபுரத்தின் உட்புறம்—(மேற்கு நோக்கி) அகோர வீரபத்ரர்.

பெரிய இராஜகோபுரம்—குடவரை வடபக்கத்தில் இரும்புக் கம்பியினால் தடுக்கப்பட்ட அறையுள், அதில் கோயில் சம்பந்தமான கணக்குகளும் இராஜகோபுரத்திற்கு மீதேறிச் செல்லும் வழியுமிருக்கிறது.

மேலும் நாலாம்பிரகாரமென்று கோவிலுக்கு புறம்பிலுள்ள மூன்று தீர்த்தங்களுக்கு உள்ளாகவும் பெரிய மதிலையொட்டியும் மடவிளாகமும், ஐந்தாம் பிரகாரம் ரதவீதிகளுமுள்ளன.

---

## புராணச் சுருக்கம்.

### பாரிஜாதவனேசுரர் துதி.

நீர்கொண்ட செழுங்கமல வயல்குலவு திருக்களரு ணெடியவானக்
கார்கொண்ட திருமேனிக் கண்ணனுநான் முகத்திறையுங் ககனத் தோருந்
தார்கொண்டு தொழநடஞ்செய் தடியரிதய யத்திலகுந் தண்ணிலாவின்
டேர்கொண்ட பிறைச்சடிலத் தெம்பிரான் பூங்கழற்றாளிறைஞ்சி வாழ்வாம்.

சிவஞானத்தைச் சிவபெருமானால் கல்லாலடியிலிருந்து உபதேசிக்கப்பெற்ற நால்வருள் ஒருவரான சனற்குமார முனிவர் திருக்கைலாச மலையிலுள்ள நந்தியெம்பெருமானை நமஸ்கரித்து, தமக்கு துர்வாஸர் முதலிய முனிவர்களுக்கு நடராஜா எக்காலமும் ஆனந்தத் தாண்டவம் செய்தருளும் தருவனம் எனும் பாரிசாதவனப் பெருமையைத் திருவாய்மலர்ந்தருளுமாறு விண்ணப்பித்தார். நந்திதேவரும் முகமலர்ந்து தெற்குநோக்கி யித்தலத்தையும் சிவபெருமானையும் தியானித்து பவுடிக புராணத்தில் உத்தரகாண்டத்தில் தலகாண்டத்தில் எண்பதுமுதல் எண்பத்தேழாவது சருக்கம் வரையில் கூறப்பட்டுள்ளபடி இத்தலமகிமையை உபதேசித்தருளினர்.

பூவுலகில் சிவதலங்கள் ஆயிரத்தெட்டாகும் அவற்றுள் நூற்றெட்டுச் சிறந்தன. அதிலும் சிவபெருமான் தாண்டவம் செய்தருளும் தலம் பலவற்றிலும் சிறந்தன.



சபை பதினருள் சிறந்தது தாண்டவ தலம் 7 என்னும் சிதம்பரம், திருக்களர், மதுரை, ஆவடையார்கோவில், திருவெண்காடு, திருவாலங்காடு, திருவாவடுதுறை ஆக ஏழு என்பது.

இப்போது, திருக்களரில், துருவாச முனிவர் பிரமதாண்டவ தெரிசனத்தைச் சதா தெரிசிக்கும்படியருள் பெற்ற வரலாற்றைக் கூறுவோம்.

துருவாச முனிவர் சிவபூசை செய்து பேர்பெற்ற இத்தலம் ஏழ்தலம் புகழ் மகாநதி ஏழினுள் சிறந்த காவிரிக்குத் தென்கரையில் திருவாரூருக்கு நிருதியிலே ஒன்றரை யோசனை தூரத்தில் விளங்குவதாகும். இங்கு ஆதிகாலத்தில் பராசர முனிவரும் காலவ முனிவரும் அமைத்துப் பூசித்த சிவாலயமும் சிவலிங்கமும் மறைந்தருளின. திருவருளாலே மகாசிவபக்தரும் துருவாசர் இத்தலமகத்துவத்தை உணர்ந்து இங்கு வந்தார். தன்னையறியாமல் இந்த இடத்திலே ஒரு பற்றுண்டாகிச் சிலகாலம் தங்கவேண்டுமென்று நினைத்தார். அப்படியே தங்கிச் சிவபூசை செய்ய எத்தனித்தார். சிவபூசைக்குப் புட்பம் அவசியமானதால் பூவுலகிலில்லாத சிறந்த புட்பத்தால் அர்ச்சிக்க ஆசைகொண்டார். தேவலோகத்திலே மிகச் சிறந்த புட்பமாகிய பாரிசாதத்தையிங்கே கொண்டுவந்து ஊன்றித் தினமும் தண்ணீர்விட்டு வளர்க்கலானார். இம்மரம் வளர்ந்து, பிறகு பலமரங்களுமுண்டாகி இத்தலமே இம்மரங்களடர்ந்த காடாயிற்று. அதனால் இவ்வனத்திற்குக் காரணப் பெயராய் பாரிசாதவனம் எனும் பெயருண்டாயிற்று.

இந்த ஆதி விருட்சத்தின் கீழ்பால் ஒரு தீர்த்தமுண்டாக்கி, அத்தீர்த்த மண்ணாலேயே, சிவலிங்க

மமைத்து அந்த விருட்சத்தினடியில் வைத்துச் சிவாகம
முறைப்படி பூசித்துவந்தார். பார்வதி தேவியையும்
தாபித்து அமுதாம்பிகையென்று பெயரிட்டுப்பூசித்தார்.
ஒருநாள் சிவபெருமான் இம்முனிவரின் பூசையால்
மகிழ்ந்து சிவலிங்கத்தினின்றும் அம்பிகையோடும்
இடபாரூடராய்க் காட்சி தந்து, வேண்டிய வரங்களைக்
கேட்கும்படி திருவாய்மலர்ந்தருளினார். முனிவர் ஆனந்
தக் கண்ணீர் சோரச் சிவனை வாழ்த்தி "ஏ பாரிஜாத
வனேசா! மற்றைய முனிவர்களைப்போலல்லாமல், நான்
பிறரைச் சபிக்குந்தோறும் என் தவம் குறையாமல்,
வளரவேண்டும்" என்று விண்ணப்பித்தபடி சிவபெருமா
னும் வரந்தந்து சிவலிங்கத்தில் மறைந்தருளினார்.

முனிவர் இத்தலத்திலே அதிக அன்புடையராய்த்
தங்கிச் சிவபூசை செய்துவருநாளில் பிரம விஷ்ணுவாதி
தேவர்களைத் துரும்பென மதித்து, ஒருநாள் பிரமதேவற்
குக் கோயிலற்றுப்போகச் சபித்தார். அப்படியே கோயி
லற்றுப்போயிற்று.

சிலநாட் சென்றபின் இத்தலத்திலே சிவபெருமா
னுக்குச் சிவாலய மமைத்துக் கண்டு மகிழ நினைத்த
வுடனே மயனை யழைத்து ஏழு மதில்கள், கோபுரங்கள்,
சிவசந்நிதி, அம்பிகை சந்நிதி, தாண்டவ சபை, முதலி
யன யாவும் சிற்பநூற் குறைவின்றி யமைத்து, எல்லாத்
தெய்வ மூர்த்தங்களையும் அவ்வவ்விடங்களில் அமைத்து
வசிட்டாதிய மகரிஷிகளைக்கொண்டு அஷ்டபந்தனம்,
மகா கும்பாபிஷேகம் ஆகியனவும் செய்து தெரிசித்து
மகிழ்ந்தார். பின்னர் பிரமோற்சவத்தையும் செய்ய
கருதி சித்திரை மாதம் பூர்வபக்க மிருகசீரிஷ நட்சத்
திரத்தில் கொடியேற்றி பத்தாம்நாளில் சித்திரை நட்சத்



திரத்தில் தீர்த்தோற்சவமும் செய்து தெரிசித்தார். சிவ
பெருமான் சந்நிதியில் நின்று தோத்தரித்து ஆனந்தக்
கூத்தாடினார். சிவபெருமான் காட்சி தந்து வேண்டிய
வரங்களைக் கேட்டுக்கொள்ளத் திருவாய்மலர்ந்தருளவே
முனிவர் "நான் இத்தலத்தில் உமது தாண்டவ தெரி
சனத்தை எப்போதும் பெற்று உமது சந்நிதி முன்
னேயே யிருக்கவேண்டும்" என்று விண்ணப்பித்துக்
கொண்டார். சிவபெருமான் "இங்கு கந்தமாதனத்து
அறுபதினாயிர முனிவர்களும் வரும்போது உமக்குத்
தாண்டவ தெரிசனம் தருவோம். என் முன்னே எப்
போதும் தெரிசனம் செய்துகொண்டிரும். அதோடு
உமக்கும் மற்ற முனிவர்கட்கும் ஆறுமுகனைக்கொண்டு
பஞ்சாக்கர உபதேசமும் செய்விப்போம்" என்று திரு
வாய்மலர்ந்து சிவலிங்கத்தில் மறைந்தருளினார்.

துருவாச முனிவர் சிவனருளை வியந்து முன்னிலும்
அதிக அன்புடனே சிவபூசை செய்து, நர்த்தன தெரி
சனம் செய்யும் நாளை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தனர்.

**நடன தெரிசனம்.** சிவபெருமான் இத்தலத்திலே
நடனம் செய்தருளுவதைத் தெரிசிக்கவேண்டி, வியாதர்,
கண்ணுவர், பரத்துவாசர், பார்க்கவர், கார்க்கியர்,
உபமன்யு, பிருகு, சுகோத்பர், அகத்யர், மாத்யந்தனர்,
சதசிரர், உசிகரர், திருவர், மவுனபார்க்கவர், அத்ரி,
ஏகநேத்ரர், தூலலோசனர், அங்கிராவிரதர், சங்கு முத
லிய பல முனிவர்கள் நாலு மைல் சுற்றளவு வரையில்
பர்ணகசாலைகளமைத்துத் தவம் செய்திருந்தனர். சில
முனிவர்கள் திருவிசைப்பாப் பதிகம் பெற்ற களந்தை
ஆதித்தேச்சுரத்திற்றங்கினர். இத்தலம் களப்பாள் என
வழங்கப்படுகிறது.

சிவபெருமான் குறித்தபடி, கந்தமாதன முனிவர்கள் அறுபதினாயிரவரும் பாரிசாதவனத்தை யடைந்து தூர்வாச தீர்த்தமாடி, சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கங்களை யணிந்து, சிவதெரிசனம் செய்துகொண்டிருந்தனர்.

பாத்மகற்பத்தில் மாசி மாதம் பௌரணையில் பிரமா தாளம் போட, வாணாசுரன் குடமுழவு முழக்க, தும்புரு நாரதர் யாழ் மீட்ட, நந்தி மத்தளம் தட்ட, எல்லாத தேவ, ரிஷி, சித்தர், வித்யாதரர், கந்தருவர் துதிக்க, பஞ்சாக்கரமே திருவுருவமாகவும் பிரணவமே திருவாசியாகவும், டமருகத்தால் படைப்பும், அபயக்கையால் காத்தலும், மழுக்கையால் அழித்தலும், ஊன்றிய காலால் மறைத்தலும், தூக்கிய திருவடியால் அருளலும் செய்யும் சபாநாயகர் சக்கரச்சுழல் போல் முந்நூற்றறுபத்தைந்து வருடம் பிரமதாண்டவம் செய்தருளினார்.

துருவாசர், கந்தமாதன ரிஷிகள் முதல் யாவரும் பரமானந்த நாடகத்திலே திளைத்து நின்றனர். இது, மாசிப்பௌரணை சாயுங்கால நேரமாகும். சிவபெருமான் யாவர்க்கும் திருவருள் புரிந்து. தூர்வாசர், கந்தமாதன முனிவர்களைக் கடைக்கண்ணால் பார்த்தருளி "மார்கழி மாதம் பூர்வபக்கம் சஷ்டித் திதியும் சதைய நட்சத்திரமும் கூடிய நாளில், பஞ்சாக்கரத்தை எமக்கும் குருநாதனாய் விளங்கிய குமரன் உங்கட்கு உபதேசித்தருளுவான் பெற்றுய்யுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளி சிவலிங்கத்தில் மறைந்தருளினார்.



## குமரக்கடவுள் பஞ்சாக்கரம் ஓதியருளியது.

சிவபெருமான் அருள் செய்தபடி அந்த நாளிலே நடராஜா சந்நிதியில் குமரன் குருபரனாகி யெழுந்தருளி அறுபதினாயிரவர்க்கும் பஞ்சாக்கரத்தை இருபத்தைந்து விதமாக உபதேசித்தருளினார். "ஏ முனிவர்களே! நான்கு வேதங்களின் முடிபு பஞ்சாக்கரமே. இது வேதங்களிற் சிறந்த யஜுர் வேதத்தில் இதயமாகிய ஏகாதச ருத்ரத்தில் விளங்கும். (1) சரீரமாகிய கோயிலில் இதய தாமரையில் சிவபெருமான் மூன்றாம்பிறையும் சடையும், நாக கங்கணக்கைகளும், புலித்தோலுடையும் அபயக் கைகளுமுடையவராய்த் தியானித்து "நமசிவய என்று மானதமாகச் செபிக்கில் மோட்சமுண்டாகும். (2) இதய தாமரையில் சிவபெருமானைக் கங்கையை யுடையவராய், உமையை யொரு பாகத்திலுடையவராய், விபூதியணிந்த திருமேனியுடையராய்க் கருதி 'ஓம் நமசிவாய" என்று மானதமாகச் செபிக்க போகமும், மோட்சமுமுண்டாகும். (3) இதய தாமரையில், தலையில் கங்கையையும் சடையையும், உமையொருபாகராய், தியானித்து ஸம் யம் ஓம் நமசிவாய என்று மானதமாகச் செபிக்க, காமிய பலனுண்டாகும். (4) முற்கூறியவண்ணம் தியானித்து "ஸம்-யம்-ஸம்-யம் ஓம்நமசிவாய என்று செபிக்க வறுமை யொழியும். (5) மேலே கூறிய முறையோடு சிவபெருமானை அட்டலட்சுமியும் சூழ, பல நவரத்னாபரணங்களையு முடையவராய்த் தியானித்து ஸம் யம் ஸம் யம் ஸம் யம் ஓம் நமசிவாய என்று செபிக்கச் சகல வசீகரமுமுண்டாகும் என்றும் உபதேசித்து, அட்டமா சித்திகளும் கைவருவதற்குப் பஞ்சாக்கரத்தைப் பல பீஜாட்சரங்களோடும் செபிக்கும் முறைமையையும் உப

தேசித்தருளினார். மேலும் இத்தலத்தில் பஞ்சாக்கரம் செபிக்கப்பட்டால் கோடி பங்கு பலனைத்தருமென்றும். இங்கிருந்து செபங்களைப் பூர்த்தி செய்து இட்ட சித்திகளைப் பெறுங்கள்" என்றும் திருவருள் செய்து குமரகுருபரன் மறைந்தருளினார்.

அப்படியே சகல முனிவர்களும் இங்கிருந்து செபித்துச் சுலபத்திலே அட்டசித்திகளையும் பெற்று சிவ ஞானமும் சுலபத்திலே பெருகப்பெற்றனர்.

## மாலாதாரகன் முத்தியடைந்தது.

முன்னொரு காலத்தில் ஒன்பது வருடம் பூமியில் மழை பெய்யாமல் பெரும் பஞ்சமுண்டாகியது. வானம் சுருங்கில் தானம் சுருங்கும் என்றபடி வானவர்க்குச் சிறப்பொடு பூசனை செல்லவில்லை. சிவபூசையும் குறைந்தது. இப்படியாக இத்தலத்திலுள்ள திருக்கோயிலும் முன் யுகத்தில் கட்டப்பட்டதாதலால் சிலமாயிற்று. மூலலிங்கமும் பூமியில் மறைந்தருளியது. இவிடம், முன்போல் வனமாயிற்று. இவ்வனத்தில் வேட்டையாட வந்த வேடன் ஒருவன் தான் அணியும்பொருட்டுப் பலவித புட்பங்களாலே அழகிய மாலையொன்றைத் தொடுத்து அதைத் தானணியுமுன் கீழே வைத்தான். அத்தானமே சிவபெருமானது முடியிருக்குமிடமாகும் பரம கருணாநிதியான சிவபெருமானே இம்மாலையை தனக்கு அன்புடன் சாத்தியதாகத் திருவுளங்கொண்டு மகிழ்ந்தார். இதன் பலனாக இவ்வேடன் மறுமறப்பில் கலிங்காரசனாகப் பிறந்து தன் திருப்பணியும் செய்து முத்தியும்பெறத் திருவுளம்பற்றினார்.



இவ்வேடன் பஞ்சமா பாதகங்களை யளவிலாது செய்தவனாயினும் அபுத்திபூர்வமாகச் செய்த இத்திருமாலையைச் சாத்திய புண்யத்தால், யமவேதனை நீங்கி, கலிங்கநாட்டில் அரசனாகப் பிறந்ததோடு முற்பிறப்புணர்வும் பெற்றான். இவன் மாலாதாரகன் என்ற பெயரையும் பெற்று, இளமையிலிருந்து மொழி பயின்ற பின்னெலாம் சிறந்த சிவநாமமே பயின்று, சிவதெரிசனம், சிவாலய கைங்கர்யம் இவைகளையே கண்ணாகக்கொண்டனன். திருமாலைகளைக் கட்டி சாத்தும்பொருட்டு நந்தவனம் பலவமைத்து மகிழ்வான். உரிய காலத்திலே அரியாசனத்திலமர்ந்து அரசு செலுத்தி எல்லாப் போகங்களையும் அநுபவித்தாலும், பாரிசாதவனத்தையும், அங்குள்ள சிவபெருமானையும் எப்போது கண்டு பணிவோம் என்று திருவருளையே சிந்தித்தவனாயிருந்தான். சிலகாலம் செல்ல அக்னிகர்ப்பன், விசாலாக்கன், தருமகீர்த்தி, அலங்கிருதி யென்னும் நான்கு உத்தமமான புத்ரர்களைப் பெற்று வளர்த்தான். மூத்தவனுக்கு உரிய வயது வந்தவுடனே பட்டத்தைக்கட்டிவிட்டு எட்டுக்கோடிப் பசும்பொன்னை சிவ திருப்பணியின்பொருட்டு எடுத்துக்கொண்டு வழியிலுள்ள சிவதலங்களைத் தெரிசித்துக்கொண்டு பாரிசாத வனத்தை யடைந்தான் அப்போது இத்தலம் வனமாயிருந்தது கண்ட அரசன் காட்டைக் களைந்து, ஆதித்தலவிருட்சத்தடியிலிருந்த சிவனைக்கண்டு வணங்கித் துதித்தான். திருக்கோயில் கட்டி, திருநந்தனவனம் உண்டுபண்ணி, சிவபூசை செய்யும் சிவாசார்யர்களையும் வரவழைத்து அமர்த்தி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்து பிரமோற்சவமும் செய்து மகிழ்ந்தான், இப்பதியிலேயே பல்லாண்டுகள் வாழ்ந்து சிவனை மறவாதேத்தி முத்தியும் பெற்றனன்.

## மகாரதன் புத்ரப்பேறு பெற்றது

தமிழ்வளர் பாண்டி நாட்டில் மகாரத பாண்டியன் என்பவன் அரசு செய்திருந்தான். அவன் சிவனருளால் எல்லா வளமும்' பெற்று மகா வீரனாய் நீதி தவறாது அரசாண்டான். எல்லாச் செல்வமும் பெற்றிருந்தும் புத்ரப்பேறில்லாப் பெருங்குறையுடையவனாய் வருந்திப் பல தான தருமங்களைச் செய்தான். வெகு நாளாகியும் பலன் பெறாதிருந்தவன் கவலை மேலிட்டு ஒருநாள் தனது முதன் மந்திரியாகிய தன்மகீர்த்தியைக் கூப்பிட்டுத் தன் எண்ணம் நிறைவேறாத காரணத்தை வினவினான். தன் நீதியில் ஏதேனும் குறையுண்டோ என்றாராய்ந்தான்.

தன்மகீர்த்தி அரசனை வணங்கி 'அரசே ஒருவன் எல்லாப் பேறுகளையும் பெற்றுவிடலாம். ஆனால் புத்ரப் பேறுமட்டும் எளிதில் கிடைக்கக்கூடியதல்ல ஆனாலும் சிவதல யாத்திரையாலும், சிவ தெரிசனத்தாலும் போகாத பாபமும், சித்திக்காத காரியமும் இல்லவே இல்லை. நானும் இப்படியே, புத்ரப்பேறில்லாது வருந்தினவனே. சிவனருளால் எனதில்லத்திற்கு அதிதியாய் வந்த சுமந்து முனிவர் என் குறையை நீக்கிப் புத்ரப் பேறடையும்படி எனக்கு உபதேசித்தார். யான் அவ்வண்ணமே செய்து புத்ரப்பேறடைந்தேன். தாமும் அப்படிச் செய்தால் தப்பாது நலம்பெறலாம் என்று வினயமாய்க் கூறினார். அரசன், நீர் ஏன் நமக்கு இத்தனை நாளும் இவ்வுபாயத்தைக் கூறவில்லை யென்று கேட்டதற்கு அமைச்சன் அரசே! உலகத்தில் மூன்று விஷயங்கள் விரும்பிக்கேட்காதவர்கட்குச் சொல்லவும் செய்யவுமாகாது என்பது விதி. 1. அன்னதானம் 2. வித்யா தானம் 3. கன்னிகாதானம். ஆதலால் தாம் என்னை



யிது சம்பந்தமாய் ஆலோசிக்கும்போது கூறினால் நல்ல பலனைக் கொடுக்குமென்று சமயம் பார்த்திருந்தேன். வேறல்ல என்றான். உடனே அரசன் மிகவும் நல்லது. அந்த உபதேசக்கிரமத்தைக் கூறும். உடனே அதன்படி நடப்பேன் என்று கூறியவுடனே மந்திரி கூறலுற்றான். காவிரி புரக்கும் சோழநாட்டில் பாரிசாதவனம் என்று ஒரு ஒப்பிலாத சிவதலம் ஒன்றுண்டு. அங்கு சென்று சந்நிதியின் முன்னுள்ள துர்வாச தீர்த்த முதலிய நான்கு திக்கிலும் விளங்கும் தீர்த்தங்களிலும் நீராடிச் சிவ தெரிசனம் செய்து சிவனடியார்கட்கு அன்னமளித்து அவர் ஆசியைப் பெற்றால் புத்ரப்பேறுண்டாகும் என்று கூறக் கேட்ட அரசன் மனமிக மகிழ்ந்து அளவிலாத் திரவியங்களை யெடுத்துக்கொண்டு சில சேனையுடனும், மந்திரியோடும் புறப்பட்டான். வழியில் கர்ப்பாரண்யம், தீத்திகிரி, மதுரை கந்தமால்வரை, இடபகிரி, திரிசிரேச்சுரம், இபவனம், ஆமிராரண்யம், பீமவனம், வடாரண்யம். பலாசவனம், அக்னீச்சரம்; சந்திரரேகை, சிரக்கண்டேச்சுரம், அன்னேச்சுரம், வசிட்டேச்சுரம், அரிவராகவாக்யம், காசிகா வனம், வில்வ வனம், வேத்ரவனம், விகற்பகாரதம், மயூரம், நயனப்ரதம், திருவிராமீச்சுரம், பிரமரேச்சுரம் அயிராவதேச்சுரம் முதலிய சிவ தலங்களைத் தெரிசித்து, பாரிசாதவனத்தை யடைந்தான். முதலிலே நான்கு தீர்த்தங்களிலுமாடி சிவசந்நிதியை யடைந்தான். இங்கே தங்கிச் சிவபூசை செய்துவரும் மார்க்கண்டேய முனிவரைக்கண்டு வணங்கினான். முனிவரும் ஆசிகூறி, இவன் வரலாற்றை யறிந்து அவனிடத்தில் கருணைகொண்டவராய் "ஏ அரசனே! உன் மனைவியோடு நாளைக்காலையில் துர்வாசதீர்த்தத்திலாடி, சொர்ன பாத்திரத்தில் வாழைப்பழம், சர்க்கரை, பசும்பால்

இவைகளைக் கலந்து பாதியைச் சிவனுக்கு நைவேதித்து, மீதமான பாதியோடு பூசணிக்காய், வெற்றிலை, சுவர்ணமும் வைத்து வேதமுணர்ந்த அந்தணர்க்குத் தானம் செய்யப் புத்ரப்பேறுண்டாகும்" என்று கூறியருளினர். அரசன் முனிவரை நமஸ்கரித்து, சிவபெருமானை வணங்கி யளவிலா அபிஷேக ஆராதனைகள் செய்து தோத்தரித்தான். மறுநாள் முனிவர் மொழிப்படியே தானம் செய்தான். மேலும் பல திருப்பணிகளைச் செய்தும் இங்கேயே சின்னாள் தங்கினன். தினந்தோறும் சிவனடியார்கட்கு அன்னதானம் அளவிலாது செய்து அவர்களது அருளைப்பெற்றான். இவ்வாறாக பாரிசாதவனேசுரர் திருவருளால் மனைவி கருவுற்று நல்ல நாளிலே இரண்டு புத்ரர்களைப் பெற்றாள். அரசன் பேரானந்தமடைந்து அளவிலாது தானதருமங்களை வாரிவழங்கிச் சிவபெருமானுக்குச் சிறப்புப்பல செய்து வணங்கினன். சிவாலய பூசைக்குப் பூதானமாக ஐந்து கிராமங்களை வழங்கி, ஒரு பிள்ளைக்கு சிவதத்தன் எனவும், மற்றொருவனுக்கு தேவதத்தன் எனவும் பெயரிட்டு மனைவி புதார்களுடனும் சிவாலயம் சென்று வணங்கி விடைபெற்று. பாரிசாதவனேசுரரை மறவாத சிந்தையொடு மதுரைக்குத் திரும்பி அரசு செலுத்தி வருவானாயினன்.

## தீர்த்தச் சிறப்பு.

1. **துர்வாச தீர்த்தம்:** கோயிலின் முன்னேயுள்ளது. இதற்கு லோகாலோக்ய தீர்த்தம், உலோக்ய தீர்த்தம், முனி தீர்த்தம், திருக்குள தீர்த்தம் எனும் பெயர்களுமுண்டு. எல்லாத் தினங்களிலும் விசேட பலனைக் கொடுக்கும். விசேட தினங்களில் இத்தீர்த்த ஸ்நான



மும் இதன் கரையில் கொடுக்கும் தானதருமங்களும் அளவிலாத பலனைக்கொடுக்கும். சர்வ பாபத்தையும் போக்கும். புத்ரப்பேறு முதலியவற்றை யளிக்கும்.

2. **பிரமதீர்த்தம்:** ஆலயத்துக்குத் தென்புறமுள்ளது. இது சிந்தாமணி தீர்த்தம் என்றும் பெயர்பெறும். நினைத்த காரியம் கைகூடப்பெறும் பெருமையுடையது. எண்ணிலா முனிவர்கள் மூழ்கி முத்திபெற்றனர்.

3. **ருத்ரதீர்த்தம்:** கோயிலின் மேல்புறமுள்ளது. கமலவாவி என்றும் பெயர். பதினொரு ருத்திரர்களுண்டு பண்ணியது. இதில் அநேக ருத்ரர்கள் மூழ்கி ருத்ரலோக மடைந்தனர். இதன் கரையில் தானதருமம் செய்தால் விசேஷ பலனுண்டாம். ஆடி, புரட்டாசி, மார்கழி மாத ஸ்நான விசேஷம்.

4. **திருஞான தீர்த்தம்:** கோயில் வடக்கு வீதியிலுள்ளது. ஞானவாவியென்றும் பெயர். கார்த்திகை ஞாயிறுகளில் மூழ்கினால் எல்லா வியாதிகளும் போம்.

குறிப்பு:—இத்தீர்த்தச் சிறப்பு வெகு விரிவாகச் செய்யுள் வடிவமாகவுள்ள களந்தை ஆதியப்பரியற்றிய இத்தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

## உற்சவாதிகள்.

**சித்திரை:** விஷு தீர்த்தவாரி.

**பிரமோற்சவம்:**—மிருகசீரிஷபத்தில் கொடியேற்றம்.

**வாகனாதிகள்:**— 1. பவளக்கால் படிச்சப்பரம், 2. சூர்யப்ரபை - சந்திரப்ரபை, 3. பூதன் - பூதகி, 4. அதிகார நந்தி-அன்னம், 5. சப்பரம் வெள்ளி ரிஷபங்

கள், மூஷிகம்-மயில், 6. கற்பக விருட்சம்-காமதேனு, 7. திருக்கல்யாணம், யானைவாகனம்-புஷ்பப் பல்லக்கு, 8. கைலாச பர்வதம்-குதிரை வாகனம் 9. பஞ்சரத பவனி (திருத்தேர்) 10. சித்திரை நட்சத்திரத்தில் துருவாச தீர்த்தத்தில் தீர்த்தவாரி.

**வைகாசி:** விசாகத்தில் திருக்களர் ஆண்டவர் உற்சவமூர்த்தியை திருவீதியில் வெள்ளி விமானத்திலும், சந்திரசேகரர் வெள்ளி ரிஷபத்திலும் புறப்பட்டு ஷை ஆண்டவருக்குக் காட்சியளிக்கும் திருவுலாக்காட்சி. திருவோண நட்சத்திரத்தில் வருஷாபிஷேகமும் மடவளாக வீதியில் சந்திரசேகரர் புறப்பாடும் நடைபெறும்.

**ஆனி:** திருமஞ்சனம் நடராஜா அபிஷேகம்.

**ஆடி:** தெட்சணாயன புண்யகால தீர்த்தவாரி.

**ஆவணி:** விநாயக சதுர்த்தசி உற்சவம்.

**புரட்டாசி:** நவராத்ரி உற்சவம். விஜயதசமியில் பொன்னுக்குண்டான் ஆற்றங்கரையில் அம்பிகைக்காக சுப்பிரமணியர் யெழுந்தருளி அம்பு போடல்.

**ஐப்பசி:** கந்தசஷ்டி, பூரணையில் அன்னபிஷேகம்.

**கார்த்திகை:** ஞாயிறுதோறும் ஞானதீர்த்தத்தில் தீர்த்தவாரி. திருக்கார்த்திகை உற்சவம். சோமவாரங்கள் விசேஷம்.

**மார்கழி:** தனுர் மாத பூஜை. திருவெம்பாவை 10 நாளும் திருவாதிரை உற்சவம். திருவாதிரை தினம் மூலஸ்தான நடராஜா வீதிபுறப்பாடு. பூர்வபட்ச, சஷ்டி, சதய நட்சத்திரத்தில் குமாரக்கடவுள் அறுபதினாயிரம் ரிஷிகட்குப் பஞ்சாட்சர உபதேசம் செய்த ஐதீக உற்சவம்.



**தை:** உத்தராயண புண்யகாலம். பொன்னுக்குண்டான் ஆற்றில் பூசத் தீர்த்தவாரி. இரவில் ரிஷபவாகன புறப்பாடு.

**மாசி:** பௌர்ணமையில் ஸ்ரீ நடராஜா மர்மதாண்டவ தெரிசனம். மகத்தில் சிந்தாமணி தீர்த்தம்.

**பங்குனி:** உத்ரத்தில் ருத்ர தீர்த்தத்தில் தீர்த்தவாரி.

## இத்தலத்தில் நடக்கும் இதர தருமங்கள்.

திருக்களர் ஆண்டவர் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகள் கட்டளையிட்டபடி இத்தரும நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1. **ருக்வேத பாடசாலை:** காரைக்குடி பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியார், வேதாத்யயன உபாத்யாயருடன் பத்துப் பிள்ளைகட்கு உண்டி முதலிய எல்லாச் செலவுகளும் செய்து வேதமோதுவித்துச் சந்நிதியில் நித்ய பாராயணம் ஏற்பாடு செய்துளார்.

2. **யசுர்வேத பாடசாலை:** காரைக்குடி ஆத. பள. பழனியப்ப செட்டியார் தருமம். ஒரு உபாத்யாயரும் பத்துப் பிள்ளைகளும் ஊண், உடை முதலியனவும்பெற்று அத்யயனம் செய்து சந்நிதிப் பாராயணமும் நித்யமும் நடைபெறுகிறது.

(ஷை செட்டியார் மருமகள் விசாலாட்சி யாச்சி ஆலய மேற்புறமுள்ள ருத்ர தீர்த்தத்தின் கீழ்கரையில் கருங்கல் படித்துறை யமைத்துள்ளார்.)

3. **சாமவேத பாடசாலை:** ஆத்தங்குடி முத்துப் பட்டணம் சா. நா. நாச்சியப்ப செட்டியார் தருமம். மூன்று சிரௌதிகள் நித்ய பாராயணம் செய்து வருகிறார்கள்.

## அறுபத்துமூவர் குருபூசை மடமும், தேவார பாடசாலையும்.

காரைக்குடி மூத்து அரு. மு. சோமசுந்தரம் செட்டியார் பாகனேரி, பெரி. அழ. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார் இருவரும் சேர்ந்த தருமமாகும். இங்கு அறுபததுமூவர் தொகையடியார் ஒன்பதின்மர், சந்தான குரவர் நால்வர் சேக்கிழார் நாயனாராதிய குருபூசைகளையும் நடத்தி, அவ்வத்தினங்களில் திருக்கோயிலில் அந்தந்த மூர்த்திகட்கு அபிஷேக ஆராதனையும் நடைபெறுகின்றன. நால்வர் குருபூசை மிகவும் சிறப்பாய் நடக்கிறது. அன்று கோயிலில் நித்ய பூசையிலுள்ள மூர்த்தியை திருவீதிவுலாச் செய்துவருவது போற்றத்தக்கதாம்.

தேவாரம் ஓதும் மூவரும் நித்தியப்படி காலையிலும் மாலையிலும் தேவார பாராயணம் செய்து வருகிறார்கள். தனுர் மாதத்தில் உதயத்துக்குமுன் தேவார பாராயணமும் வீதிவலமும் நடைபெறும்.

## பசுமடமும், திருநந்தனவனமும்

காரைக்குடி ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியார், ஷையூர் ஆத. லெ. ஆதப்ப செட்டியார் இருவர்களும் சேர்ந்த தருமம். இருபது பசுக்களும் ஒரு ரிஷபமும் வைத்துக் காப்பாற்றித் தினமும் பாலபிஷேகக் கட்டளை நடந்துவருகிறது.

நந்தனவனம்: சுமார் ஒரு ஏக்கர் அளவில் வைத்து திருமாலை கட்டியும் ஏற்படுத்தி எல்லாக் காலங்களுக்கும் புட்பமும் சாத்தப்படுகின்றது.



**திருநீறு, காசிக் கெங்கை, தசாங்கம்:** நித்யப்படி யபிஷேகத்துக்கும், பூசைக்கும், காரைக்குடி சி. பழ. லெ லெட்சுமணஞ் செட்டியாரவர்களது தருமமாக நடைபெறுகிறது.

**துருவாச தீர்த்தம்:** காரைக்குடி சா. நா. அ. அள. அளகப்ப செட்டியார், ஷையார் தம்பி சொக்கலிங்க செட்டியார் இருவரும் திருப்பணி செய்து, படித்துறைகள் கட்டி, குளக்கரையில் தீபமிட்டு வருகிறார்கள். ஷை அழகப்ப செட்டியாரின் மூத்த குமாரரான அருணாசலஞ் செட்டியார் திருவனந்தல் காலத்தை நைவேத்யத்தோடு நடத்திவருகிறார்.

**குழித்தளிகைக் கட்டளைகள்:** காரைக்குடி வெ. ராம. வெ இராமனாதஞ் செட்டியார் அவர்களால் உச்சி காலத்தில் ஸ்ரீ ஸ்வாமிக்கு குளித்தளியல் நேவேத்தியமும், காரைக்குடி ரூ.ப.மெ. குடும்பத்தாரால் ஸ்ரீ அம்பாளுக்கு குழித்தளிகை நேவேத்தியமும், காரைக்குடி ராம. ஆ. த. மெ. இராமசாமி செட்டியார் ஷையூர் ஆ. த. லெ. ஆதப்ப செடடியார் அவர்களால் ஸ்ரீ நடராஜாவுக்கு குழித்தளிகை நேவேத்தியமும் வைத்து நடத்தி வருகிறார்கள்.

**நிர்வாகம்:** திருக்களர் ருக்வேதபாடசாலை அதிபர் ஸ்ரீ வெ. ராம. வெ. இராமனாதஞ் செட்டியார் மானேஜிங் டிரஸ்டியாகவும், கோட்டையூர் ஸ்ரீ கவீ. சொ. வீ. அழகப்ப செட்டியார் டிரஸ்டியாகவும் இருந்துவருகிறார்கள்.

கோட்டையூர் கவீ. சொ. வீ. அழகப்ப செட்டியார் அவர்கள் வருஷா வருஷம் வைகாசி மாதம் திருவோண [illegible]த்திரத்தில் ஸ்ரீ ஸ்வாமி அம்பாளுக்கு வருஷாபி

ஷேகம் செய்து அன்றிரவு 5ம் பிரகாரத்தில் ஸ்ரீ சந்திர சேகரரைப் புறப்பாடும் செய்துவருகிறார்கள். இதற்கு மூலதனமாக அழகிரிகோட்டகம் கிராமத்தில் அரை வேலி நிலமும் மேற்படியார்களால் வாங்கி விடப்பட்டிருக்கிறது.

## தல புராணம்:-

இலக்கியம்: (1) பவிஷ்ய புராணம் முதனூலாகும். இப்புராணத்தில் உத்தரகாண்டத்தில் க்ஷேத்ர கண்டத்திலே எண்பதுமுதல் எண்பத்தோழாவது சருக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

(2) **வழிநூல்** இருநூறு வருடங்கட்குமுன் தருமபுர ஆதீனத்தில் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ அழகிய சிற்றம்பல தேசிகர் காலத்து ஆதீன வித்வானாயிருந்த களந்தை இதுவே ஆதித்தேச்சரம் என்று திருவிசைப்பாப் பதிகம் பெற்றதலம். தற்போது களப்பாள் என வழங்கும். (திருக்களர்க்குக் கன்னிமூலையில் 1 மைலிலுள்ளது). ஆதியப்பர் என்னும் புலவரால் ஷை வடமொழிப் புராணத்தைத் தழுவித் தமிழில் 411 பாடல்களாகப் பாடப்பெற்றுள்ளது. இத்திருக்களர்த் தலவாசியாயிருந்த சாமிநாத உபாத்யாயரால், ஷை களப்பாள் தலவாசியும். இத்தலத் தருமகர்த்தாவாயிருந்த திரு. S. அரங்கசாமி முதலியாரவர்களது பொருளுதவியால் அச்சிடப்பட்டு விளங்கும்.

---



உ

# திருக்களர்த் தேவாரம்.

### திருஞானசம்பந்தர்—பண்—சீகாமரம்.

### திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல் வாவிசூழ்பொழினீண்ட மாவயலீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊருளாரிடுபிச்சைபேணு மொருவனே யொளிர்செஞ்சடைம்மதி
ஆரநின்றவனே யடைந்தார்க்கருளாயே. (1)

தோளின்மேலொளி நீறுதாங்கிய தொண்டர்வந்தடி போற்றமிண் [டிய
தாளினார் வளருந்தவமல்கு திருக்களருள்
வேளினேர் விசையற்கருள் புரிவித்தகா விரும்பும் மடியாரை
ஆளுகந்தவனே யடைந் தார்க்கருளாயே. (2)

பாடவல்ல நன்மைந்தரோடு பனிமலர் பலகொண்டு போற்றிசெய்
சேடர்வாழ் பொழில்சூழ் செழுமாடத் திருக்களருள்
நீடவல்ல நிமலனேயடி நிரைகழல் சிலம்பார்க்கமாநடம்
ஆடவல்லவனே யடைந்தார்க் கருளாயே. (3)

அம்பினேர்தடங் கண்ணினாருடனடவர் பயின்மாடமாளிகைச்
செம்பொனார் பொழில் சூழ்ந்தழகாய திருக்களருள்
என்புபூண்டதோர் மேனி யெம்மிறைவா யிணையடிபோற்றி
நின்றவர்க்
கன்பு செய்தவனே யடைந்தார்க்கருளாயே. (4)

கொங்குலா மலர்ச்சோலை வண்டினங் கிண்டி மாமதுவுண்டிசை [செய்த
தெங்கு பைங்கமுகம் புடைசூழ்ந்த திருக்களருள்
மங்கைதன்னொடுங் கூடிய மணவாளனே பிணைகொண்டொர்
கைத்தலத்
தங்கையிற் படையா யடைந்தார்க் கருளாயே. (5)

கோலமா மயிலாக் கொண்டல்கள் சேர்பொழிற் குலவும் வயலி [டைச்
சேலிளங்கயலார் புனல்சூழ்ந்த திருக்களருள்
நீலமேவிய கண்டனே நிமிர்புன் சடைப்பெருமானெனப்பொலி
ஆலநீழலுளா யடைந்தார்க்கருளாயே. (6)

தம்பலம்மறியாதவர் மதிருங்கு மால்வரை யாலழுலெழுந்
தின்பலங் கெடுத்தாய் திகழ்கின்ற திருக்களருள்
வம்பலர் மலர்தூவி நின்னடி வானவர் தொழக்கூத்து கந்தபேர்
அம்பலத்துறைவாய வடைந்தார்க் கருளாயே. (7)

குன்றடுத்த நன்மாளிகைக்கொடி மாட நீடுயர் கோபுரங்கண்மேல்
சென்றடுத்துயர் வான் மதிதோயுந் திருக்களருள்
நின்றடுத்துயர் மால் வரைத்திரடோளினாலெடுத்தான் றனீண்முடி
அன்றடர்த்து கந்தாயவடைந் தார்க்கருளாயே. (8)

பண்ணியாழ் பயில்கின்ற மங்கையர் பாடலாடலொடார வாழ்பதி
தெண்ணிலாமதியம் பொழில் சேருந்திருக்களருள்
உண்ணிலாவிய வொருவனே யிருவர்க்கு நின்கழல் காட்சியாரழல்
அண்ணலாய வெம்மான வடைந்தார்க் கருளாயே. (9)

பாக்கியம் பலசெய்த பத்தர்கள் பாட்டொடும் பல பணிகள்
தேக்கியல் குணத்தார் சிறந்தாருந் திருக்களருள் [பேணிய
வாக்கினன் மறையோதி னாயமண் டேரர் சொல்லிய சொற்க
ளான பொய்
ஆக்கிநின்றவனே யடைந்தார்க் கருளாயே. (10)

இந்துலங்கெழு மாடவீதியெழில் கொள் காழிநகர்க்கவுணியன்
செந்து சேர்மொழி யாரவர் சேருந் திருக்களருள்
அந்தியன்னதோர் மேனியானை யமரர் தம்பெருமானை ஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும் பாடத்தவமாமே. (11)

திருச்சிற்றம்பலம்.

## திருக்ஷேத்திரக்கோவை.

### திருநாவுக்கரசு நாயனார் அருளியது.

மண்ணிப்படிக்கரை வாழ் கொளிப்புத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக்குடி
விளமர், விராடபுரம் வேட்களத்தும்
பெண்ணை யருட்டுறைதன் பெண்ணாகடம்
பிரப்பில் பெரும்புலியூர் பெருவேளூரும்
கண்ணை களர்க் காறைகழிப்பாலையுங்
கயிலாய நாதனையே காணலாமே.



114001

## திருப்பதிக்கோவை.

கடைமுடியே யோணகாந்தன்றளி கோட்டூர்வை
கன்மாடக் கோயிலிடை யாறு பழையாறை.
வடதளிநற் றினை நகரங்கோணமா மலைசீர்
வன்னியூர் கருவிலியனேகதங் காவதநல்
லிடமேவு கடிக்குளந் தற் றிருக்களரே ன்றிவைகட்
கிரும்பதிக மொவ்வொன்றென் றிசைத்திடுக விப்பாற்
குடவாயில் புனவாயி றாங்கானை மாடக்
கோழம்ப மவளிவணல்லூர் கோலக்காவே.
மேலாகும் விளமர் காவீரம் பெருவேளூர்
மிளிர் தலையா லங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலுமிரும் பூளைதிரு வாதைப் பெரும்பாழி
மாலூரு மவளிவணல்லூர் பரிதி நியமம்
வாழ் வெண்ணி பூவனூர் பாதாளீச்சர நீர்ச்
சேலூருந் திருக்களர் சிற்றேம முசாத்தானந்
திருவிடும்பா வனத்தோடு சேர்ந்த கடிக்குளமே.

## பெரியபுராணம்.

### திரிஞானசம்பந்தர் புராணம்.

மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்துபாடி
மாலயனுக்கரிய பிரான் மருவுந்தானம்
பற்பலவுஞ் சென்று பணிந்தேத்துப்பாடிப்
பரவு திருத் தொண்டர்குழாம் பாங்கினெய்தக்
கற்றவர் வாழ் தண்டலை நீணெறியுள்ளிட்ட
கனகமதிற் றிருக்களருங் கருதார் வேள்வி
செற்றவர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித்
திருமறைக்காட்டதன் மருங்கு சேர்ந்தாரன்றே.

பொன்னிவளர் தருநாடு புக்குமிக்க
பொருவில் சீர்த்திருத்தொண்டர் குழாத்தினோடும்
பன்னகப்பூணணிந்தவர் தங்கோயிலூறும்
பத்தருடன் பதியுள்ளோர் போற்றச்சென்று
கன்னிமதிற் றிருக்களரும் போற்றிக் கண்டங்
கறையணிந்தார் பாதாளீச்சரமும் பாடி
முன்னணைந்த பதிபிறவும் பணிந்து போற்றி
முள்ளிவாய்க்கரை யணைந்தார் முந்நூன் மார்பர்.

உமாபதி சிவாசார்யார் அருளிய சிவகோத்ர
சிவநாமக் கலிவெண்பா.

திருக்கள ரூரிற் றிகழுமிளங் கொம்போ
டிருக்குங் களர்முளை யீசா!

திருச்சிற்றம்பலம்.

வானவர் வாழ்க முத்தீ மறையவர் மகிழ்ந்து வாழ்க
வானின மிகவும் வாழ்க வலைபுனல் சொரிக காரூர்
தேனிமி ரலங்கல் வேந்தன் செழுமணிக் குடைமீதோங்க
நானிலத் திலகுஞ் சைவ நன்னெறி சிறக்கமாதோ.

பாரிசாதவனேசுரர் திருவடிகளே சரணம்.

பாரதி பிரஸ், மன்னார்குடி. Or. No. 2577 C. 500.

சிவமயம்

## திருக்களர் ஸ்ரீ பாரிஜாதவனேஸ்வர ஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நன்செய் புன்செய் நிலங்களின் விபரம்.

| நெ. | கிராமத்தின் பெயர் | விஸ்திரணம் ஏ. | விஸ்திரணம் செ. | பெருமானம் ரூ. | பெருமானம் அ. | பெருமானம் பை. | வருமானம் ரூ. | வருமானம் அ. | வருமானம் பை. | கிஸ்தி ரூ. | கிஸ்தி அ. | கிஸ்தி பை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருக்களர் ... | 151 | 10½ | 48300 | 0 | 0 | 5000 | 0 | 0 | 860 | 0 | 0 |
| 2 | குமாரமங்கலம் ... | 45 | 54 | 20250 | 0 | 0 | | | | 242 | 12 | 0 |
| 3 | அழகிரிகோட்டகம் | 6 | 58 | 2000 | 0 | 0 | 200 | 0 | 0 | 45 | 9 | 0 |
| 4 | சிலத்தநல்லூர் ... | 0 | 63 | 100 | 0 | 0 | 0 | 8 | 0 | 0 | 3 | 9 |
| 5 | மேலக்கொருக்கை | 10 | 32 | 1000 | 0 | 0 | 5 | 0 | 0 | 3 | 6 | 0 |
| 6 | கீரைக்களூர் ... | 3 | 28 | 500 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 | 10 | 0 |
| 7 | செட்டியமூலை ... | 2 | 32 | 350 | 0 | 0 | குமாரமங்கலத்தோடு சேர்க்கை | | | | | |
| 8 | வேளைகாநல்லூர் ... | 0 | 70 | 200 | 0 | 0 | 5 | 0 | 0 | 0 | 8 | 2 |
| 9 | மண்ணுகுண்டான் | 2 | 26 | 350 | 0 | 0 | 80 | 0 | 0 | 17 | 2 | 0 |
| | ஆக மொத்தம் ... | 222 | 73½ | 73050 | 0 | 0 | 5292 | 8 | 0 | 1170 | 2 | 11 |

திருக்களர், குமாரமங்கலம், செட்டியமூலை கிராமம் 3, நஞ்சையில் வருமானம் ரூ. 3500—0—0
புஞ்சையில் வருமானம் ரூ. 1500—0—0

ஆக ரூ. 5000—0—0

Q23:38.21193.T
N45

சிவமயம்

# (ABSTRACT STATEMENT FOR PUBLICATION)

## Sri Parijathavaneswaraswamy Devasthanam Tirukkalar, Mannargudi Taluk.

### Receipts & Charges (Cash & Paddy) Account for Fasali 1353.

| No. | Receipts | Paddy K. | Paddy M. | Paddy P. | Cash RS | Cash AS. | Cash PS. | Charges | Paddy K. | Paddy M. | Paddy P. | Cash RS. | Cash AS. | Cash PS. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Opening Balance | 1489 | 6 | 0 | 135 | 6 | 9 | Office Exp. ... | 169 | 6 | 0 | 1297 | 10 | 8 |
| 2 | Rent ... | | | | 459 | 13 | 7 | Kovil Exp. ... | 7 | 4 | 0 | 2013 | 2 | 4 |
| 3 | Interest ... | | | | 9 | 10 | 9 | Village Exp. ... | 287 | 8 | 1 | 410 | 9 | 7 |
| 4 | Undial ... | | | | 1 | 12 | 0 | Kist ... | | | | 1179 | 3 | 7 |
| 5 | Miscellaneous ... | | | | 116 | 6 | 9 | Contribution .. | | | | 293 | 7 | 0 |
| 6 | Mohini ... | | | | 109 | 6 | 0 | Repairs ... | | | | 254 | 4 | 6 |
| 7 | Purchase & Sales | | | | | | | Court Cost ... | | | | 95 | 14 | 9 |
| | of Paddy... | 54 | 2 | 0 | 4828 | 8 | 6 | Paddy Sales ... | 1404 | 5 | 1 | | | |
| 8 | Thope & Nanja | | | | | | | Sundry Persons .. | 2006 | 0 | 1 | 11219 | 0 | 2 |
| | Lease... | 1943 | 11 | 2 | 1569 | 4 | 9 | Colosing Balance. | 1676 | 7 | ½ | 53 | 4 | 9 |
| 9 | Sundry Persons... | 1976 | 3 | 3¼ | 9586 | 4 | 3 | | | | | | | |
| 10 | Kattalai ... | 87 | 7 | 2 | | | | Total... | 5551 | 6 | 3¼ | 16816 | 9 | 4 |
| | Total... | 5551 | 6 | 3¼ | 16816 | 9 | 4 | | | | | | | |

Examined and found Corect Subject to my report of even date.

14—6—45

(Sd.) M. Rajamalar, G.D.A.R.A.,
Registered Accountant, Audit